# கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கு உரித்தான அதிகாரசபையின் தேறிய மிகையான ரூபா 16,005,452 தொகைக்காக ரூபா 5,601,908 தொகையான வருமான வரி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 23.31 மில்லியனான வேலை பூர்த்தி செய்யப்பட்டிராத ஒப்பந்தங்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தைக் கணக்கீ:டு செய்கையில் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 2.79 மில்லியன் இலங்கை வங்கியின் குத்தகைக் கடன் பணம், தொழிற்படு மூலதன மாற்றக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்கீட்டுக் குறிப்பு இல. 7 இன் பிரகாரம், அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கொள்கை முன்னைய ஆண்டின் போது மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 7,253,690 தொகையான 1 - 4 ஆண்டுகள்

வரையான காலப்பகுதிக்கு உரித்தான கடன்பட்டோருக்காக ரூபா 211,639 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 அதிகாரசபையின் தொடர்ந்து இயங்கும் தன்மை

அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 ஆண்டுகளின் போது முறையே ரூபா 15,788,833 தொகையும் ரூபா 31,794,284 தொகையும் ரூபா 12,841,863 தொகையும் ரூபா 12,869,156 தொகையுமாக எதிர்மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் ஊழியர்களின் சம்பளத்தைச் செலுத்துவதற்காக திறைசேரியின் ஏற்பாடு பெறப்படுவதால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தேறிய சொத்துக்கள் 50.3 சதவீதத்தால் அதிகரித்த போதிலும் நடைமுறை விகிதம் முறையே 1:1.5, 1:2.1,1:1.9 ஆகவும் 1:2.8 ஆக இருந்தமையால் திறைசேரியின் நிதி உதவி மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையின் தொடர்ந்து இயங்கும் நிலையில் சிக்கல் காணப்பட்டது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஆண்டுகளுக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட 04 சேவை நாடுனர் கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,979,472 தொகையானதுடன் அக் கடன் தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபையால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக முன்கொண்டுவரப்படும் சேவை நாடுனர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் ரூபா 104,453 தொகையும் நிர்மாணிப்புகள், பொறியியல் சேவைகள், வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 9,125,215 தொகை, நானாவித முற்பணத் தொகையான ரூபா 223,014 மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரித் தொகையான ரூபா 15,733,971 தொகையும் தீர்க்கப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீதிகளின் உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் ரூபா 177,000 தொகையான கடன்கொடுனர் மீதிக்காகவும் ரூபா 31,046 கூட்டுத்தொகையான 03 கடன்பட்டோர் மீதிக்காகவும் அவர்களால் உடன்பாடு தெரியவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவை | |
| (i) II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | வேற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாது இரு உத்தியோகத்தர்கள் 03 மாதங்கள் முதல் 14 மாதங்கள் வரையான காலமாக அங்கீகாரம் இன்றி பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் சம்பளமாக ரூபா 102,560 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br>‘‘அதிகாரசபையின் நிதி நிலைமை சாதகமாக இருக்கையில் இப் பதவிக்காக புதிய ஊழியர்களை ஆட்சேர்க்கும் வரை நிறுவனத் தலைவரால் கடமை மேவுகைக்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மேலும் அப் பணியை நிறைவேற்றுவதற்காக நீடிப்பதற்கு பணிப்பாளர் சபையின் |

அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக பொது முகாமையாளரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.''

(ii) XIV ஆம் அத்தியாயத் தின் 3 ஆம் 4 ஆம் பிரிவுகள்

ஊழியர்கள் தமது கடமைகளை மேற்கொள்வதற்காக போக்குவரத்துச் செய்கையில் அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த செலவை ஏற்கக் கூடியவகையில் தங்குமிட மற்றும் இடைநேர் படிப்பணத்திற்காக கூட்டிணைந்த படிப்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக அதிகாரசபை உத்தியோகத்தர்கள் சிலருக்கு ஹொட்டேல் பட்டியலைச் செலுத்துவதற்காக ரூபா 49,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 8.3.4 ஆம் பந்தி

இல்லத் தொலைபேசிப் படிப்பணத்திற்காக உரித்தற்ற நிறைவேற்று உத்தியோகத்தர் தரத்தில் அல்லாத 06 உத்தியோகத்தர்கள் தொலைபேசி பட்டியல்களைத் தீர்ப்பதற்காக அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது ரூபா 42,365 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) நி.பி. 756(4) மற்றும் 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை

கைதவிர்க்கப்படுவதற்கு உகந்த வாகனங்களைக் கண்டறிவதற்காக அமைச்சுச் செயலாளரால் தகமை பெற்ற மூவரைக் கொண்ட விசேட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டியதுடன் வாகனத்தின் பெறுமதியும் அக் குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 7,047,495 பெறுமதியான 04

வாகனங்கள் கைதவிர்க்கப்படுகையில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 அதிகாரப் பொறுப்பை மீறிச் செயற்படல்

அதிகாரசபையால் வாகனக் கொள்வனவுத் தேவைப்பாட்டின் படி பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2012 மே 17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பெற்றோல் கார் ஒன்றும் 03 டீசல் கெப்களும் கொள்வனவு செய்யப்படுவதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக 03 பெற்றோல் கார்களும் 01 டீசல் கெப்பும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 16,005,452 மிகையாகக் காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 18,952,422 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 34,957,874 ஆல் அதிகரிப்பு காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது சம்பளங்களைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட திறைசேரி ஏற்பாடுகளும் வாகன விற்பனையால் கிடைக்கப்பெற்ற இலாபமும், மிகை அதிகரிப்பதற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செயற்பாடற்ற வருமானம் 301 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் ஏழுநாள் வைப்பு வட்டி வருமான அதிகரிப்பு, அவ் வருமான அதிகரிப்பிற்குக் காரணமாகியிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் முக்கிய வருமான வளமான கூட்டு ஆதன முகாமைத்துவ சான்றிதழ் விநியோகிப்பு வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 22 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்திற்கு மொத்த தேறிய சொத்து விகிதம் (526) சதவீதமாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போதான அதிகாரசபையின் செயவலாற்றல் இலக்குகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| விடயம் | செயலாற்றல் இலக்கிடப்பட்டவை | செயலாற்றல் உள்ளபடியானவை | செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரமான முன்னேற்றத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| - முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் ஸ்தாபிக்கப்படுவதனைப் பதிவுசெய்தல் மற்றும் புதுப்பித்தல் | 250 | 219 | 88 |
| - கூட்டு ஆதன சான்றிதழ்கள் வழங்கல் | 116 | 58 | 50 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கு மற்றும் அவற்றை எய்துவதற்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் செயல் நடவடிக்கைத் திட்டம் அதிகாரசபையின் நோக்கங்கள் எய்தப்படுவதற்காக ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து நிச்சயமற்றுக் காணப்பட்டது. மேலும் கூட்டு ஆதனங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும்

செயற்பாட்டு நடவடிக்கைகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்காககவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு நகரத்திலும் கொழும்பு நகரத்தின் வெளியிலும் 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது 659 முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் இவற்றில் 295 மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் செயற்படாத நிலையில் காணப்பட்டது. அம் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை மீள ஸ்தாபிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கொழும்பிற்கு வெளியேயுள்ள மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட வேண்டிய முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை இனங்கண்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை கம்பஹா மாவட்டத்திலும் கண்டி மாவட்டத்திலும் 02 முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது பதிவு செய்யப்பட்ட 365 முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் .ருந்த போதிலும் இதில் 216 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பதிவை புதுப்பிக்கும் கட்டணத்தை அதிகாரசபைக்குச் செலுத்தியிருக்கவில்லை.

### 3.1.2 நோக்கங்கள் எய்தப்படாமை

அதிகாரசபையைக் கூட்டுத்தாபனமாக்கும் நோக்கில் பின்வரும் நோக்கங்கள் 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தல்) அதிகாரச்சட்டத்தின் 5 (உ) பிரிவின் பிரகாரம் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையை ஸ்தாபித்ததை அடுத்து அதன் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்து கட்டுப்படுத்த வேண்டிய போதிலும் அதிகாரசபையால் வழங்கப்பட்ட தகவல்களின் படி 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வழங்கப்பட்ட கூட்டு ஆதன சான்றிதழ்களின் எண்ணிக்கை 611 ஆகக் காணப்பட்டது. இவ்வாறே அக் காலப்பகுதியின் போது பதிவு செய்யப்படுவதற்கு இலக்கிடப்பட்ட முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை 1110 ஆன

போதிலும் 659 முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மேற்குறித்த 5(எ) பிரிவின் பிரகாரம் கூட்டு ஆதனத்தின் ஆதனங்கள் பொது வசதிகளின் பராமரிப்பிற்காக உள்ளூராட்சி அதிகாரசபைக்கு ஆதனத்தை ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையால் தமது நோக்கங்களுக்கு மாறாக கம்பஹா மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலைகளில் நீர் மற்றும் மலசலகூட முறைமை செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதற்காக முறையான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் கம்பஹா வைத்தியசாலையில் இருந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 920,322 ஆகக் காணப்பட்டது.

(ஆ) கொழும்பு 04, பம்பலப்பிட்டி தேசிய வீடமைப்பு முறைமையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் ஒப்பந்தத்திற்காக அதிகாரசபையின் உள்ளக பொறியியற் பிரிவு இருக்கையில் வெளித்தரப்பினருக்கு ரூபா 3,500,000 தொகைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(i) இவ் ஒப்பந்தத்தின் கால நீடிப்பிற்காக நியாயமான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத நிலையில் 2012 ஒக்டோபர் 21 ஆம் திகதி முதல் 2013 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 மே மாதம் வரை அச் செயற்திட்டம் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இவ் ஒப்பந்தத்திற்கான வேலை ஆரம்பிப்பிற்கான முற்பணங்களை வழங்குகையில் அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதத்திற்கு மாத்திரமே வழங்கப்படக் கூடிய போதிலும், இதற்கு முரணாக ஒப்பந்தக்காரருக்கு 30 சதவீதமான ரூபா 1,200,696

தொகை ஆரம்பிப்பிற்கான முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக முற்பணக் கொடுப்பனவிற்கான பிணையேனும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்குறித்த ஒப்பந்தத்திற்காக போட்டி விலைமனுக் கோரல் முறைமை பின்பற்றப்பட்டு பத்திரிகைகளின் மூலம் விலைமனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் விலை மனுக்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2012 ஏப்ரல் 09 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக விலை மனுக்கள் பிரசித்தமாக திறக்கப்படாது ஒரு விலை மனு 2012 ஏப்ரல் 04 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பேணல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 6,751,832 தொகை 2010 சனவரி 08 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தொகை 2010 ஆம் ஆண்டின் நிலையான வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 7,810,432 ஆகக் காணப்பட்டது.

“தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு இது வரை இவ் ஆதனத்திற்கு உரித்தான அனுகூலச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் உறுதியை வழங்க முடியாதுள்ளதாகவும் இந் நிலை காரணமாக ஒருங்கிணைந்த முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் ரூபா 7,810,432 ஆன உரிய தொகை அதிகாரசபையிடம் மேலும் வைத்துக்கொள்ளப்படுவதற்கு நேர்ந்துள்ளதாகவும் பொது முகாமையாளரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.”

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் கைதவிர்க்கப்பட்ட 03 கெப்களும் ஒரு காரும் ஏலவிற்பனை செய்யப்படுவதற்காக சந்தை மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்தும் ஏலவிற்பனை செய்யப்பட முன்னரும் அவ் வாகனங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 57,787 செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டின் போது கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையால் திருத்தப்பட்ட 07 வீடமைப்பு திட்டங்களுக்காக ரூபா 55.5 மில்லியன் தொகையான திறைசேரி ஏற்பாடு ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதிகாரசபையால் அவ் வீடமைப்பு முறையை பழுதுபார்ப்பதற்காக ரூபா 65.22 மில்லியன் பெறுமதியான 07 விலை மனுக்கள் கோரப்பட்டமைக்காக அக் கொள்வனவின் பெறுமதி 36 துணைப் பாகங்களுக்கு பிரிக்கப்பட்டு விலை மனுக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்காக திணைக்கள மட்டத்தில் விலை மனுக் கோரல் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

‘‘குறித்த செயற்பாடு குறித்த வருடத்தில் பூர்த்திசெய்யப்படுவதற்கு நேர்ந்துள்ளமை மற்றும் மேலும் ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்படும் நோக்கில் இவ்வாறு துணைப் பிரிவாக கேள்வி கோரப்படுவதாகவும் இவ்வாறு கேள்வி கோரப்படுவதன் மூலம் பெரிய அளவிலான கேள்விகளுக்காக வழங்கப்பட வேண்டிய ஏற்பாடு (நிர்வாகச் செயற்பாடுகள் போன்ற) இம் மதிப்பீட்டின் மூலம் அகற்றப்பட்டு கேள்வி கோரப்படுவதற்கான இயலுமை உள்ளதாகவும் பொது முகாமையாளரால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.:’’

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் பதவியணி தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவிநிலை | 15 | 07 | 08 |
| இரண்டாம் | 71 | 54 | 17 |
| முதலாம் | 52 | 49 | 3 |
| | 138 | 110 | 28 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதிப் பொது முகாமையாளர் (ஒழுங்குபடுத்தல்) பதவி மற்றும் 07 உதவிப் பொது முகாமையாளர் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக நிலவுவது அதிகாரசபையின் செயலாற்றலுக்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) மேலும் 17 இரண்டாம் பதவிகளினதும் 03 ஆரம்ப பதவிகளினதும் வெற்றிடங்கள் நிலவிய போதிலும் மீளாய்வாண்டின் போது எந்த உத்தியோகத்தரும் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 வாகனப் பாவனை

அதிகாரசபையிடம் 08 வாகனங்கள் இருந்ததுடன் அவ் வாகனங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,902,536 தொகையான எரிபொருட் செலவினத்திற்காகவும் ரூபா 3,647,808 தொகை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினத்திற்காகவும் செலவிடப்பட்டிருந்தமையால் ஒரு கிலோமீற்றருக்கு சராசரி ஓட்டச் செலவினம் ரூபா 32 இற்கும் ரூபா 36 இற்கும் இடையிலான வீச்சில் நிலவியது. மேலும் முன்னைய ஆண்டின் போது ஒரு கிலோமீற்றருக்கு சராசரி ஓட்டச் செலவினத்தைப் பார்க்கிலும் மீளாய்வாண்டிற்கான செலவினம் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களி பொறுப்பு நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகாரசபையின் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட வேண்டிய பின்வரும் நியமங்கள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- கடந்த 03 ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள்
- வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளின் எண்ணிக்கை

### 4.2 செயற்பாட்டுத் திட்டம்

செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளும் அவை எய்தப்பட்டவற்றிற்கும் இடையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டன. இலக்குகளை எய்தும் நிலைகள் காலக்கிரமத்தில் மீளாய்வு செய்யப்பட்டு நலிவுகள் இனங்காணப்பட்டு இதற்கு முறையான தீர்வுகள் எடுக்கப்படுவதற்கான இயலுமை தொடர்பாக முகாமைத்துவம் முறையான கவனத்தைக் கோரியிருக்கவில்லை. இந் நிலை நிறுவகத்தின் நலிவான நிதி நிலையைப் போன்று தொடர்ந்தியங்கும் தன்மையிலும் நேரடித் தாக்கத்தைக் கொண்டிருந்தது.

### 4.3 முகாமைத்துவ சபையின் அமைப்பு

2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முகாமைத்துவ சபை நியதிச்சட்ட அதிகாரத்தினால் நியமிக்கப்படும் 09 அங்கத்தவர்களையும் அமைச்சரினால் நியமிக்கப்படும் 06 பேரையும் கொண்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ சபையின் அங்கத்துவம் அமைச்சரினால் நியமிக்கப்படும் இருவரை மாத்திரம் கொண்டு வரையறுக்கப்பட்டிருந்தது.

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்களின் படி பாதீடிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கு இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காகக் கிடைக்கும் சேவைக் கட்டண வருமானம் பாதீட்டுடன் ஒப்பிடப்படுகையில் உள்ளபடியான சேவைக் கட்டணம் 48.26 சதவீத்தால் வீழ்ச்சியுற்றிருந்தது.

(ஆ) கூட்டு ஆதன சான்றிதழ்கள் வழங்கல்களின் வருமானம் பாதீட்டுடன் ஒப்பிடப்படுகையில் உள்ளபடியான வருமானம் 65 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) பாதீடிடப்பட்ட செலவினம் உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 16 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கும் இடையலான வீச்சில் பாதீடிடப்பட்ட செலவினத்தைப் பார்க்கிலும் உள்ளபடியான செலவினம் குறைவடைந்திருந்ததுடன் பாதீடிடப்பட்ட செலவினம் குறித்த வகையில் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 4.5 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) வாகனப் பயன்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) கூட்டு ஆதன சொத்துக்களை இனங்காணல்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு